# ஐரோப்பாவிலிருந்து 3 ஹெலிகள், ஆயுதங்கள் கொள்வனவு


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 4 இதழ் 245
யாழ்ப்பாணம் புதன்கிழமை 20 — 10 — 1993


(கொழும்பு)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து மூன்று 'எம். ஐ-17IV' இராணுவ போக்குவரத்து ஹெலிகொப்டர்களை இலங்கை படையினர் வாங்க முடிவு செய்துள்ளதாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து அடுத்த வருடம் பல ஆயிரம் கோடி ரூபாவிற்கு பெருமளவு இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதுபற்றி ஷமிந்திர பெர்னாண்டோ சண்டே ஐலண்டில் எழுதியுள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தேடுதல் தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினரையும் புலிகளின் தீவிர ஆதரவாளர்களையும் தேடி படையினர் தினமும் பாரிய அளவில் வீடுவீடாக தேடுதல் நடாத்தி வருகிறார்களாம்.

இத்தேடுதலில் இராணுவமும் பொலிஸாரும் கூட்டாக

(3-ம்பக்கம் பார்க்க)

### ● ஒரே சமயத்தில் ▬

# கொழும்பு பொலிஸ் நிலையங்களை விடுதலைப் புலிகள் தாக்கலாம்

## 'திவயின' சிங்கள இதழ் தகவல்

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் உள்ள பல பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் திடீரென தாக்குதல் நடத்தலாம் என பொலிஸ் அறிக்கை ஒன்றை ஆதாரம் காட்டி 'திவயின' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இரகசிய விசாரணைகளின்போது இந்தத் தாக்குதல் திட்டம் பற்றி தெரியவந்துள்ளதாக சம்பந்தப்பட்ட பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் இளைஞர்களையும் யுவதிகளையும் கொண்ட ஒரு குழு கொழும்புக்கு வந்துள்ளன ராம். சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகள் என்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களை தாக்குவதே விடுதலைப் புலிகளின் முதல் நோக்கமாக உள்ளதென்று இரேஷ்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் மீண்டும் இளைஞர் சடலம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தென் இலங்கையின் பல இடங்களில் மீண்டும் இளைஞர்களின் அநாதரவான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தினைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆறுபேரின் சடலங்களில் இரு வர் துப்பாக்கியால் சுட்டும் மூன்று பேர் வெட்டியும் ஒருவர் டயர் போட்டு எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டுள்ளார்

(3-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் குழுக்கள் இணைந்து புலிகளைபலப்படுத்தவேண்டும்

### - தொண்டமான் கோரிக்கை

(கொழும்பு)

இனப் பிரச்னையைத் தீர்க்க வழிகளோ, சிங்கள அரசியல் வாதிகள் ஒருபோதும் முன்வைக்கவோ அல்லது அதற்கு உருப் படியான யோசனையைத் தெரிவிக்கவோ போவதில்லை. இந்நிலையில் சகல தமிழ் அமைப்புக்களும், குழுக்களும் ஒன்றிணைந்து, தற்போது தமிழரின் சுதந்திரத்திற்காகப் போராடி வரும் விடுதலைப் புலிகள் போராளிகளுக்குத் தமது முழு ஆதரவையும் வழங்கவேண்டும் என அமைச்சர் தொண்டமான் கோரியுள்ளார்.

(2ம் பக்கம் பார்க்க)

**மீண்டும் போர் மேகம் சூழ்கிறது**

வான் பரப்பில் யுத்த விமானங்கள்
கடல் பரப்பில் பீரங்கிக் கப்பல்கள்
நிலப் பரப்பில் கவச வாகனங்கள்

**தமிழா எழு!**

எழுந்திரு இல்லையேல் பெரும்பழி
எதிரிக்கு வெட்டுவோம் புதைகுழி

### காலி துப்பாக்கி சூட்டுச் சம்பவம்:

## நாடாளுமன்றில் இன்று விவாதம்

(கொழும்பு)

தென் மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட பதவிப்பிரமாண வைபவத்தின்போது காலியில் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி இன்று நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடைபெறவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைக்கு யுத்தம் தீர்வாகாது

### - இராணுவத் தளபதி

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு யுத்தம் தீர்வாக இருக்கமுடியாது. அரசியல் தீர்வினூடாகத்தான் சமாதானத்தைக் காணமுடியும். இவ்வாறு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன 'லக்பதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவருடன் மோதவேண்டாமென கடற்படைக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

இந்திய மீனவர்களுடனோ அல்லது இந்தியக் கடற்படையுடனோ தேவையற்ற மோதல்களில் ஈடுபடவேண்டாம் என ஸ்ரீலங்கா கடற்படைத் தலைமையகம், வடபகுதிக்

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்படையுடன் கூட்டு ரோந்தில் ஈடுபட இந்தியா மறுப்பு

(புதுடில்லி)

இலங்கைக் கடற்படையுடன் இணைந்து, பாக்குநீரிணையில் கூட்டு ரோந்தில் ஈடுபட இந்தியா மறுத்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைத் தீர்வில் சர்வதேச தலையீட்டை அனுமதிக்க முடியாது

### - பிரதமர் ரணில் அறிவிப்பு

(வாஷிங்டன்)

விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. ஆனால் இனப் பிரச்னை தீர்வில் சர்வதேச தலையீட்டை அனுமதிக்க முடியாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்காவில் பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பத்திரிகை

(4-ம் பக்கம் பார்க்க)

மணிவாசகு

உடலைச் சோர்ந்து களை பிழந்த நிலையில் உள்ள போது, உள்ளத்தை முனைப்பாகச் செயல்பட இழைப்பது பலன் தராது
— கேயஸ் லேலைவி

## நமது நோக்கு

### உணவில் தன்னிறைவு

இன்றைய போர்க் காலச் சூழ்நிலையை மக்கள் பூரணமாக விளங்கிக் கொண்டு, அதற்கேற்ற வகையில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

தெற்கில் நடக்கும் பிரசாரங்களை நோக்கும் போது, தமிழ் மக்கள் மீது பல கோணங்களிலிருந்தும் நெருக்குதல் கொடுத்து, நிரந்தரமான அடிமைகள் ஆக்குவதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்பது தெளிவாகின்றது.

ஏற்கெனவே போடப்பட்ட பொருளாதாரத் தடைகளைத் தாங்கிப் பழக்கப்பட்ட மக்கள், இனி வரும் நெருக்கடிகளையும் உரிய முறையில் எதிர்நோக்கி வாழ்வார்கள் என்ற நம்பிக்கை நமக்குண்டு!

''வேட்டில் உறுதி கட்டும் உடைமை!'' என்ற ஆன்றோர் வாக்கை நாம் மறந்துவிடலாமா?

சோதனைகள் வரும்போது, கலங்காதிருந்து உறுதியோடு செயற்பட வேண்டாமா?

அடிப்படைத் தேவையான உணவுற்பத்தியில், காலத்திற்கேற்ற விதத்தில் விவசாய நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

இதுபற்றிய சில ஆலோசனைகளை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மிளகாய், வெங்காயம் போன்றவற்றை வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி இலாபம் பெற முடியாது.

இத்தகைய உபஉணவுப் பொருட்களை நமது மாவட்டத்தின் தேவையறிந்து, அதற்கேற்ற விதத்தில் உற்பத்தி இலக்குகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, இங்கு தோன்றக்கூடிய உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவிற்காயினும் நிவர்த்தி செய்யக்கூடிய உணவு வகைகளை உற்பத்தி செய்ய வேண்டும்.

உழுந்து, பயறு, சோளஅவரை, சோளம் போன்ற பயிர்ச்செய்கையில் ஈடுபட முன்வருமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களப் பணியாளர்கள் இதற்கேற்றவிதத்தில் உரிய வழிகாட்டலை விவசாயிகளுக்கு வழங்குவார்கள் என நம்புகிறோம்.

**சனசமூகநிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் பாடசாலைகளின் விவசாய ஆசிரியர்கள் போன்ற பல்வேறு பகுதியினரதும் கூட்டு முயற்சி இதற்கு அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.**

# ★ இராணுவ நடவடிக்கையால் மூடப்பட்ட ஆலயங்களை திறக்க வெள்ளிதோறும் பிரார்த்தனை

## 'இந்துசமய பேரவை' வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையால் மூடப்பட்ட இந்து ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெற வேண்டியும், மக்கள் அமைதியாக வாழவும் எதிர்வரும் 22ம் திகதி வெள்ளிக்கிழமை அனைத்து ஆலயங்களிலும் பி.ப. 5 மணி தொடக்கம் பி.ப. 6 மணிவரை பிரார்த்தனை நடாத்துமாறு யாழ். இந்து சமயப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இந்துசமய பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் போன்ற வரலாற்றுப் பெருமை மிக்க இந்துக் கோவில்கள் உட்பட இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் இருக்கும் பல திருத்தலங்கள் மூடப்பட்டுப் பூசைகள் தடைப்பட்டிருப்பது குறித்து யாழ். இந்து சமயப் பேரவை தனது ஆழ்ந்த கவலையைத் மீண்டும் வெளியிட விரும்புகின்றது. திருக்கேதீஸ்வரம் புனித ஆலயத்தினுள் இராணுவம் புகுந்து ஆலயம் மூடப்பட்டுப் பூசைகள் தடைப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், திவ்யபதி திருத்தலங்கள் யாவும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு மூடப்பட்டு இருப்பதுடன் கோவில் கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டும் கோவில் பிரகாரங்கள் அசுத்தப்படுத்தப்பட்டும் அவற்றின் புனிதத்தன்மை கெடுக்கப்பட்டும் இருப்பது இந்த நாட்டில் வாழும் இந்துக்களுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கோவில்கள் மீதான விமானத் தாக்குதல்களையும் எறிகணை வீச்சுக்களையும் அந்நியர் ஆட்சிக் காலத்திலும் பார்க்க மோசமான இந்து சமய எதிர்ப்பு நடைவடிக்கைகளாக நாம் கருதுகின்றோம். இந்த அநியாயமான நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஜனாதிபதியையும், இலங்கை அரசாங்கத்தையும் பல முறை நாம் வேண்டியும் பலனேதுமில்லை.

திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் உட்பட மூடப்பட்டிருக்கும் அனைத்து இந்துக்கோவில்களும் திறக்கப்படவும் பூசைகள் தடையின்றி நிகழவும் தமிழ் மக்களுக்கு அமைதியும் சுபீட்சமும் ஏற்படவும் இறையருள் வேண்டி எல்லா இந்து ஆலயங்களிலும் எதிர்வரும் ஐப்பசி மாத முதலாவது வெள்ளிக்கிழமை தொடக்கம் மாதம் முடிவுள்ள புனித வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகளிலும் கூட்டுப் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுமாறு எல்லா இந்துக்களையும் யாழ். இந்து சமயப் பேரவை கேட்டுக்கொள்கின்றது. இப் பிரார்த்தனைகளின் போது திருக்கேதீஸ்வரப் பதிகம் உட்பட திருமுறைகளை ஓதும் படியும் கேட்டுக் கொள்கிறோம். இவ் விசேட பூசைகளையும் பிரார்த்தனைகளையும் ஒழுங்கு செய்யுமாறு எல்லா இந்து அறங்காவலர்கள், பரிபாலனசபையினர், சமய நிறுவனங்கள், கோவில் முகாமையாளர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## சாளரம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

'சாளரம்' அக்டோபர் மாத இதழ் வெளிவந்துள்ளது. அழகிய முறையில் அச்சுப் பதிப்பில் மாணவர்கள் வரவுறுதி, பொன் விழாகண்ட யாழ் இந்து மகளிர் கல்லூரி, ஆபத்தான வாந்தி பேதி நோயிலிருந்து மக்களைக் காப்போம், மாவீரன் பண்டார வன்னியன், சோன்மேரி என்ற ஒருதீவு போன்ற பலகட்டுரைகளும் 'சொந்த நாடே சொர்க்கம்' என்ற சிறுகதையும் பல கவிதைகளும் தாங்கி நல்ல தரமான இதழாக வெளிவந்திருக்கிறது. —ம

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கியவட்டத்தின் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை எழுதிய 'ஈழம்' குறுங்காவிய வெளியீட்டு விழா நாளை மாலை 3-30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவிற்கு யாழ். மாவட்ட பிரதி ஆணையாளரும் யாழ். இலக்கிய வட்டத் தலைவருமான து. வைத்தியலிங்கம் தலைமைதாங்குவார். ஆசியுரையை ஆ. சபாரத்தினமும் வெளியீட்டுரையை கோகிலா மகேந்திரனும் மதிப்புரையை க. சொக்கலிங்கமும், பேராசிரியர் கா. சிவத்தம்பியும் வழங்குவர். —எஸ்.

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து செயல்பட்டு வருகிறார்களாம் இதே வேளை நகரின் பெருமளவு பாதுகாப்பு கடற்படையினரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாம்.

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இதுவரை 3,200க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-இ)

## இராசிபலன்

20-10-1993

புதன்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 4)

பஞ்சமி மு. ப. 8.41 வரை: மூலம் பி. இ. 3.40 வரை: இராகுகாலம் நண்பகல் 12 02 முதல் 1 32 வரை. சுபநேரம் மாலை 4.32 முதல் 6 02 வரை மரணயோகம் ஷஷ்டி விரதம்.

மேஷம்: தொழில் பாதிப்பு மதிப்புக்குறைதல், அநாவசிய செலவு.

இடபம்: அநாவசிய தொல்லை, குழப்பமான நிலை, மனவேதனை.

மிதுனம்: திருமணயோகம் விருந்தினர்வருகை பணவரவு.

கடகம்: புதிய முயற்சி, புத்திரர் பெருமை சுபகாரியம்.

சிம்மம்: பணியாட்கள் பிரச்சனை, கடமைதவறுதல் அலைச்சல்.

கன்னி: பெண் தொல்லை, இடம்பெயர்வு, மனவேதனை.

துலாம்: பிறருக்காக கடன் படல், வைராக்யதவி, இனிய வாய்ப்பு.

விருச்சிகம்: மறைமுக நட்பு, வயிற்றில் ரோகம் மனவெறுப்பு.

தனுசு: தவறான எண்ணம் கடும்சினம், தொழில்வெற்றி.

மகரம்: விதண்டாவாதம், கற்பனையான பயம், உறவினர் பகை.

கும்பம்: தொழில் முதலீடு, சகோதர உதவி, யாராலோ.

மீனம்: காரியபலிதம், நற்செய்தி, மனமகிழ்ச்சி.

— ஜோஸ்யர்

## ஐரோப்பாவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய குறிப்புகள் வருமாறு;

அரச முப்படையினதும் ஆயுத பலத்தை பெருமளவில் பலப்படுத்த முடிவுசெய்துள்ளது. ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அரச அனைத்து இராணுவ தளபாடத் தேவைக்காக கிழக்கு ஐரோப்பாவுடன் தொடர்பு கொள்ளவுள்ளது. கிழக்கு ஐரோப்பாவிலிருந்து முன்னணி ரக ஹெலிகொப்டர்கள் வாங்க ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. மூன்று 'எம். ஐ-17IV' ரக ஹெலிகொப்டர்கள் இவ்வருட இறுதிக்குள் இலங்கை விமானப் படைக்கு வந்து சேர்ந்துவிடும் அடுத்த வருடமும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தே பெருமளவு இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இரட்டை இயந்திர ஹெலிகொப்டர்கள் காமன்வெல்த்தின் சுதந்திரநாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது (அதாவது முன்னாள் சோவியத் குடியரசில்) இவை முன்னாள் வார்சோ நாடுகளில் பயன்படுத்தப்பட்டன. தற்போது பல நாடுகளின் விமானப் படைகளும் மேற்படி மிகப்பெரிய போக்குவரத்து ஹெலிகொப்டரையே பயன்படுத்துகின்றன.

மேற்படி மூன்று ஹெலிகொப்டர்களும் இங்கு வந்து சேர்ந்ததும் விமானப்படையில் இவற்றின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துவிடும். இலங்கை தற்போது செக்கோஸ்லவாக்கியாவின் 'டி-55' ரக பிரதான யுத்த டாங்கிகளையே பயன்படுத்துகிறது.

அரசு கிழக்கு ஐரோப்பாவிலிருந்தே பெருமளவு ஆயுதங்களை பெறவுள்ளது இங்குசிறிய ரக ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் மிக குறைந்த விலையில் பெறலாம். முன்னாள் சோவியத் குடியரசு நாடுகள் உட்பட இப்பிராந்தியத்தில் பல நாடுகள் சாதாரண சிறிய ரக ஆயுதமான பிஸ்ரல் முதல் ஏவுகணை கப்பல்கள் நீர்மூழ்கிக்கப்பல்களையே விற்க தயாராயுள்ளன.

இலங்கைப் படையினரின் தேவைக்கு இந்நாடுகளிலிருந்து இராணுவ தளபாடங்கள், இராணுவ பயிற்சி மற்றும் இராணுவ தேவைகளை பெறுவது பெரியதொரு விடயமல்ல என பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில் கூறியுள்ளனர். எமக்கு ஆயுதங்கள் குறைந்த விலையிலேயே தேவைப்படுகிறது எனவும் அவ்வதிகாரிகள் கூறியுள்ளன.

இலங்கை அடுத்த வருடத்திற்கு சுமார் 2500 கோடி ரூபாவை பாதுகாப்பு செலவிற்கு ஒதுக்கியுள்ளது.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரானபோராட்டத்தில் தன்னைப் பலப்படுத்த கிழக்கு ஐரோப்பிய இராணுவ சந்தை நிச்சயம் உதவுமென இராணுவ ஆய்வாளர்கள் கருதுவதாகவும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-இ)

## பெற்றோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிப் பெற்றோர் தின விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு, கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். -162-இ

## தென் பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

இந்த ஆறுபேரும் இறுவரை அடையாளம் காணப்படவில்லை, முகத்துவாரம், மீகான வெலிசேரிய, நீர்கொழும்பு போன்ற இடங்களில் இச்சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

மோட்டார் வாகனத்தில் வந்த ஒரு கோஷ்டியினராலேதான் இவர்கள் கொலைப்பட்டிருக்கலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன (ம-இ)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சின்னத்தம்பி கந்தையா

இருபத்திரெண்டு ஆண்டுகள் எம்மோடு இணைந்து சேவையாற்றிய முன்னாள் பணியாளரும், சுதுமலை தெற்கு மானிப்பாயை வதிப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற அமரர் சின்னத்தம்பி கந்தையா அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவரோடும் துயரத்தில் பங்கு கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

(ஜ-535)


**எள்ளைப் பயிரிடுவோம்**
**எண்ணெ வளம் பெருக்கிடுவோம்**

